# TOR TIMES OF REPUBLIC

VOICE OF TAMILNADU

# டைம்ஸ் ஆஃப் ரிபப்ளிக்

டிசம்பர் 2025 | மலர் -04 | இதழ் - 9 | தமிழ் மாத இதழ் | விலை ரூ.30/-



## அதிமுக டூ தவெக.. செங்கோட்டையனின் ஸ்கெட்ச் !!

## மறுக்கப்படும் இந்துக்களின் உரிமை.. இதுதான் திராவிட மாடலா?

TOP4
HIRE DRIVERS




# DAY OR NIGHT,

*Ride's Always Right!*

## —WITH TOP 4 DRIVERS!—

**DOWNLOAD TOP4 HIRE DRIVERS APP**

**CHENNAI HO: 044 2828 7777**

top4calldrivers.com

SCAN TO DOWNLOAD APP



# தொகுப்பாளர் உரை

இந்த ஆண்டு அரசியல் எழுச்சிகளாலும், ஜனநாயக விழுமியங்களுக்கு எதிரான இடைவிடாத சவால்களாலும் குறிக்கப்பட்டுள்ளது. உண்மை பெரும்பாலும் எதிர்க்கப்பட்டு, பொறுப்புக்கூறல் கேள்விக்குள்ளாக்கப்படும் சூழலில், அச்சமோ சாதகமோ இல்லாமல் உண்மைகளைப் புகாரளிக்கும் பொறுப்பில் எங்கள் வெளியீடு உறுதியாக இருந்தது. தடைகள் இருந்தபோதிலும், நாங்கள் தொடர்ந்து யதார்த்தங்களை அம்பலப்படுத்தினோம், அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்கினோம், சுதந்திரமான பத்திரிகையின் கொள்கைகளை நிலைநிறுத்தினோம்.

நம்பகமான பத்திரிகை மீதான நம்பிக்கை, அழுத்தம் மற்றும் எதிர்ப்பை எதிர்த்து நிற்க எங்களுக்கு உதவுகிறது, எங்கள் வாசகர்கள் மற்றும் பங்களிப்பாளர்களின் நம்பிக்கை மற்றும் ஆதரவால் இந்த உறுதிப்பாடு வலுப்படுத்தப்படுகிறது.

நம்பிக்கை, தைரியம் மற்றும் புதுப்பித்தலின் நினைவூட்டலாக இருக்கும் கிறிஸ்துமஸை நாம் கொண்டாடும்போது, புதுப்பிக்கப்பட்ட உறுதியுடன் புத்தாண்டை எதிர்நோக்குகிறோம். வரவிருக்கும் ஆண்டு ஜனநாயகத்தை வலுப்படுத்தட்டும், மக்களின் குரல்களைப் பெருக்கட்டும், பொது வாழ்வில் ஒருமைப்பாட்டை மீட்டெடுக்கட்டும். உண்மையின் பக்கம் நிற்பதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

ஒரு நோக்கமுள்ள கிறிஸ்துமஸ் மற்றும் உறுதியான, முற்போக்கான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**– Times of Republic**
**குழுவின் சார்பாக நன்றிகள்!**

TOR

# TIMES MAGAZINE

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| EDITOR & PUBLISHER<br>C P NAVIN<br>TOR ID : 1 | ADVISORY PANEL<br>AJAY BENJAMIN<br>TOR ID : 2 | ADVISORY PANEL<br>AMBIGAPATHY<br>TOR ID : 10 | ADVISORY PANEL<br>SEKAR SP<br>**Retired Jailer**<br>TOR ID : 044 | LEGAL ADVISOR<br>RC PAUL KANAGARAJ<br>TOR ID : | LEGAL ADVISOR<br>M KRISHNA KUMAR<br>TOR ID : 58 | LEGAL ADVISOR<br>AKBAR BASHA<br>TOR ID : 54 |
| LEGAL ADVISOR<br>KARTHIK<br>TOR ID : 20 | LEGAL ADVISOR<br>RUBAN J<br>TOR ID : 129 | LEGAL ADVISOR<br>M BOOPATHI<br>TOR ID : | ADMINISTRATION<br>ARATHY T<br>TOR ID : | ADMINISTRATION<br>ARASUKUMAR P<br>TOR ID : 8 | ADMINISTRATION<br>B SURESH<br>TOR ID : 182 | ADMINISTRATION<br>NAVEEN RAGHAVENDRA M<br>TOR ID : |
| ADMINISTRATION<br>KATHIRESAN T<br>TOR ID :131 | ADMINISTRATION<br>M ANTO<br>TOR ID : | ADMINISTRATION<br>B SATHISH KUMAR<br>TOR ID : | ADMINISTRATION<br>MERYL BERT DAS R<br>TOR ID : 42 | ADMINISTRATION<br>RADHIKA NEDUNCHEZHIAN<br>TOR ID : 212 | ADMINISTRATION<br>THILAGA<br>TOR ID : | REPORTER<br>K KARTHIKEYAN<br>TOR ID : 47 |
| REPORTER<br>NATARAJ S<br>TOR ID : 145 | REPORTER<br>JAHIR HUSSAIN<br>TOR ID : 148 | REPORTER<br>D I TAGORE<br>TOR ID : 161 | REPORTER<br>J NAVANEETHAKRISHNAN<br>TOR ID : 162 | REPORTER<br>KARTHIKEYAN<br>TOR ID : 164 | REPORTER<br>B HARIPRASADHAN<br>TOR ID : 165 | REPORTER<br>SIVAKUMAR<br>TOR ID : 168 |
| REPORTER<br>C S R JEEVAN<br>TOR ID : 169 | REPORTER<br>A RAGUNATHAN<br>TOR ID : 196 | DNC<br>DURAIGANESH C<br>TOR ID : 19 | DNC<br>SIDDHARTHAN K<br>TOR ID : 21 | DNC<br>NARAYANAN M<br>TOR ID : 11 | DNC<br>VIGNESH P<br>TOR ID : 13 | DNC<br>SHANTHAKUMAR<br>TOR ID : 16 |
| DNC<br>SAMUEL<br>TOR ID : 18 | DNC<br>DINESH GOUR<br>TOR ID : 22 | DNC<br>EBINESAN J<br>TOR ID : 25 | DNC<br>ISMAIL A<br>TOR ID : 26 | DNC<br>PARTHIBAN<br>TOR ID : 27 | DNC<br>MOHAN KUMAR J<br>TOR ID : 28 | DNC<br>K SELVAM<br>TOR ID : 29 |
| DNC<br>S SAJAN GOUR<br>TOR ID : 31 | DNC<br>ARUNACHALAM<br>TOR ID : 35 | DNC<br>RAHUL U<br>TOR ID : 37 | DNC<br>B SELVAM<br>TOR ID : 38 | DNC<br>CAVIN VINODHS<br>TOR ID : 40 | DNC<br>BHASCO MANICKAM<br>TOR ID : 41 | DNC<br>DEENA DAYALAN<br>TOR ID : 43 |
| DNC<br>SEKAR<br>TOR ID : 44 | DNC<br>KNC SARAVANAN KUMAR<br>TOR ID : 45 | DNC<br>K V BALACHANDRA<br>TOR ID : 48 | DNC<br>SANGEETHA<br>TOR ID : 50 | DNC<br>KAVIRAJASU<br>TOR ID : 51 | DNC<br>OMPRAKASH GOUR<br>TOR ID : 55 | DNC<br>SATHISH<br>TOR ID : 57 |
| DNC<br>SHANTHA KUMAR<br>TOR ID : 59 | DNC<br>DEVI<br>TOR ID : 61 | DNC<br>P VINITH KUMAR<br>TOR ID : 64 | DNC<br>DINESH A<br>TOR ID : 66 | DNC<br>NARESH KUMARA<br>TOR ID : 70 | DNC<br>SENTHILKUMAR<br>TOR ID : 76 | DNC<br>ARIHANT M<br>TOR ID : 79 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| DNC<br>MANO<br>TOR ID : 83 | DNC<br>RICHESH RAJ M<br>TOR ID : 86 | DNC<br>PRASANTH E<br>TOR ID : 87 | DNC<br>THIRUMURUGAN A<br>TOR ID : 90 | DNC<br>ROBERT E<br>TOR ID : 92 | DNC<br>GLADSON RICHARD<br>TOR ID : 94 | DNC<br>MAHIMON<br>TOR ID : 101 |
| DNC<br>SATHISH KUMAR G<br>TOR ID : 103 | DNC<br>PREMKUMAR A<br>TOR ID : 110 | DNC<br>HARI BALACHANDRAN<br>TOR ID : 115 | DNC<br>VIGNESHD<br>TOR ID : 118 | DNC<br>MAGESHWARAN S<br>TOR ID : 122 | DNC<br>NARAYAN SAIY<br>TOR ID : 125 | DNC<br>PERIYA SWAMY K<br>TOR ID : 139 |
| DNC<br>R MANIKANDAN<br>TOR ID : 143 | DNC<br>VIGNESH<br>TOR ID : 146 | DNC<br>MATHINATHUL MUSALMATH<br>TOR ID : 149 | DNC<br>KABILAN<br>TOR ID : 157 | DNC<br>JONY AMBROSE<br>TOR ID : 167 | DNC<br>PRANAV<br>TOR ID : 171 | DNC<br>L SHARATHKUMAR<br>TOR ID : 175 |
| DNC<br>ANAND<br>TOR ID : 176 | DNC<br>PRASAD PERUMAL<br>TOR ID : 177 | DNC<br>MIDHUN FRANCIS<br>TOR ID : 180 | DNC<br>SANTHOSH S<br>TOR ID : 181 | DNC<br>SURESH<br>TOR ID : 182 | DNC<br>SEETHALAKSHMI<br>TOR ID : 184 | DNC<br>BHARATHAN<br>TOR ID : 186 |
| DNC<br>JENESHWAR<br>TOR ID : 187 | DNC<br>MANOHAR<br>TOR ID : 188 | DNC<br>MEERA HUSSAIN<br>TOR ID : 190 | DNC<br>SAMEER<br>TOR ID : 192 | DNC<br>KARTHICK RAJA<br>TOR ID : 193 | DNC<br>P VIGNESH<br>TOR ID : 197 | DNC<br>SARATHKUMAR M<br>TOR ID : 198 |
| DNC<br>BALACHANDER S<br>TOR ID : 200 | DNC<br>ARAVINTH J<br>TOR ID : 203 | DNC<br>S MANIVANNAN<br>TOR ID : 206 | DNC<br>RATHNA KUMAR<br>TOR ID : 216 | DNC<br>SANTHYA R<br>TOR ID : 217 | DNC<br>EVANS DENNISON<br>TOR ID : 219 | DNC<br>DANIEL DISELVA<br>TOR ID : 220 |
| DNC<br>SWEETY K<br>TOR ID : 221 | DNC<br>HARI PRASATH V<br>TOR ID : 222 | DNC<br>ARUN ARUMUGAM<br>TOR ID : 223 | DNC<br>SURYA PRAKASH R<br>TOR ID : 224 | DNC<br>SURIYA PRAKASH<br>TOR ID : 225 | DNC<br>VIGNESHWARAN<br>TOR ID : 226 | DNC<br>DEEPIKA<br>TOR ID : 227 |
| DNC<br>SIDHARTHAN GOWTHAM<br>TOR ID : 228 | DNC<br>SURYA ARUMUGAM<br>TOR ID : 230 | DNC<br>DEEPAK KANNADASAN<br>TOR ID : 231 | DNC<br>AAKASH<br>TOR ID : 232 | DNC<br>RAJASURENDAR<br>TOR ID : 233 | DNC<br>PRADUSHKUMAR<br>TOR ID : 234 | DNC<br>PREMNATH<br>TOR ID : 236 |
| DNC<br>SARANKUMAR S<br>TOR ID : 237 | DNC<br>PRAVEENKUMAR J<br>TOR ID : 239 | TOR ID : | TOR ID : | TOR ID : | TOR ID : | TOR ID : |
| TOR ID : | TOR ID : | TOR ID : | TOR ID : | TOR ID : | TOR ID : | TOR ID : |

# இளவல் டூ தலைவர்.. அதிமுக டூ தவெக..
# செங்கோட்டையனின் ஸ்கெட்ச் !!

அதிமுகவிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பனையூர்ல இருக்க தமிழக வெற்றிக் கழக அலுவலகத்துல கட்சி தலைவர் விஜய் முன்னிலையில இணைந்தார். கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற உறுப்பினரா இருந்த செங்கோட்டையன் கடந்த நவ. 26 அவரோட பதவிய ராஜினாமா பண்ணியிருந்தாரு. அதற்கு மறுநாளே விஜய் கட்சியான தவெகவுல இணைந்து இருக்காரு.



அதிமுக ஒன்றிணையனும்ன்னு குரல் எழுப்புன செங்கோட்டையன் அதிமுகவிலிருந்து கடந்த அக்டோபர் மாசம் நீக்கப்பட்டார். அந்த வகையில தவெக அலுவலகத்துல விஜய் முன்னிலையில் தவெகவில் இணைந்தார். அப்போ, செங்கோட்டையனுக்கு தவெக சால்வை அணிவிச்சு வரவேற்றார். அப்போது, செங்கோட்டையனோட ஆதரவாளர்களும் அவரோட இருந்தாங்க.. செங்கோட்டையன் கூடவே நூற்றுக்கணக்கான தொண்டர்கள் தங்கள தவெகவுல இணச்சிக்கிட்டாங்க..

கட்சியில இணையும்போது "வேற்றுமைகளை களைந்து மக்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அனைவருக்கும் சமவாய்ப்பு, சம உரிமை கிடைக்க பாடுபடுவேன். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவக் கொள்கையை கடைப்பிடிப்பேன் என்று உளமாற உறுதி கூறுகிறேன்" அப்படின்னு செங்கோட்டையனும் அவரோட ஆதரவாளர்களும் விஜய் முன்னிலையில உறுதிமொழி எடுத்துக்கிட்டாங்க..

தவெகவில் இணைஞ்சபிறகு தவெக நிர்வாகிகளோட கட்சி அலுவலகத்துல செய்தியாளர்களை சந்திச்சாரு செங்கோட்டையன். அப்போ, "அதிமுகவில் எம்ஜிஆரால் நான் அடையாளம் காட்டப்பட்டவன். தலைவருக்கு பின்னால் அணிதிரண்டவர்களில் நானும் ஒருவன். அவர் கட்சி தொடங்கிய போது, இந்த கட்சி 100 நாட்கள் கூட ஓடாது என்று விமர்சித்தனர். ஆனால், மூன்று முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்துள்ளார். ஆனால் இன்றைய நிலைமைகள் வேறு. ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு ஆட்சி நடத்தினோம். மூன்று கூறுகளாக பிரிந்தோம். எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்தினோம். ஆனால் அது நடைபெறவில்லை. நான் என்று ஒருவன் நினைத்தால், ஆண்டவன் தான் என்று பார்த்துக்கொள்வான்." அப்படின்னு சொன்னாரு.

தொடர்ந்து பேசுன அவரு, இன்று திமுக வேறு, அதிமுக வேறு அல்ல.. இரண்டும் ஒன்றாக இணைந்து தான் பயணத்தை மேற்கொள்கிறார்கள் என்றார். மேலும், "இளவல் விஜய் மக்கள் மனதில் இடம் பெற்றுள்ளார். தமிழகத்தில் ஒரு மாற்றம் வேண்டும். மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். 2026-ல் மாபெரும் புரட்சி உருவாகி வெற்றி என்ற இலக்கை இளவல் விஜய் எட்டுவார் என்று தெரிவித்துக்கொள்கிறேன்" என்றார்.

செங்கோட்டையன் தவெகவுல இணைவாருன்னு பேசபட்டது. அதை தொடர்ந்து அவரு கட்சியில இனைஞ்சாரு.. இந்த நிகழ்வுல ரொம்ப பெருசா பேசபட்டது, செங்கோட்டையன் சட்டை பாக்கெட்ல இருந்த முன்னாள் முதல்வரும் அதிமுக தலைவருமான ஜெயலலிதாவின் போட்டோ.. இத பத்தி கேள்வி கேட்டப்போ, "யார் படத்தை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். புகைப்படத்தை எடுத்திருந்தால், இன்றே புகைப்படத்தை எடுத்துவிட்டார் என்று நீங்களே சொல்வீர்கள், ஒரே நாளில் இப்படி மாறிவிட்டார் என்று பேசுவீர்கள். பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் ஆகியோரின் புகைப்படங்கள் விஜய் வாகனங்களிலும் உள்ளன" அப்படின்னு பதில் சொன்னாரு..

தமிழக அரசியல்ல ரொம்ப மூத்தவரான செங்கோட்டையன் தன் கட்சியில இணைஞ்சதும் விஜய் ஒரு வீடியோவை வெளியிட்டார். அதுல, "20 வயது இளைஞராக இருக்கும் போதே எம்ஜிஆர்-ஐ நம்பி அவரது மன்றத்தில் சேர்ந்தவர். அந்த சிறுவயதில் சட்டமன்ற உறுப்பினர் என்ற பெரிய பொறுப்பை ஏற்றவர். அதன் பின் அவருடைய பயணத்தில், அந்த இயக்கத்தின் இரு பெரும் தலைவர்களுக்கு (எம்ஜிஆர், ஜெயலலிதா) பெரிய நம்பிக்கைக்குரியவராக அரசியல் களத்தில் இருந்தவர். 50 ஆண்டுகளாக ஒரே இயக்கத்தில் இருந்த அண்ணன் செங்கோட்டையன், இன்று அவரது அரசியல் அனுபவமும், அவருடைய அரசியல் களப்பணியும் நம்முடைய தமிழக வெற்றிக் கழகத்துக்கு பெரிய உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன், அவருடன் இணைந்து பணியாற்ற நம்முடன் கைகோர்க்கும் அனைவரையும் மக்கள் பணியாற்ற வரவேற்கிறேன்" அப்படின்னு பேசி இருந்தாரு..

தவெகல இணைந்த கையோட தன்னோட சொந்த ஊருக்கு போன்ற செங்கோட்டையனுக்கு அங்க பெரிய சர்ப்ரைஸ் காத்துட்டு இருந்தது. அங்க கூடி இருந்த ஆயிரக்கணக்கான தவெக தொண்டர்கள்



செங்கோட்டையனுக்கு ராஜா வரவேற்பு கொடுத்தாங்க. இந்த வரவேற்ப பாத்து எதிர்க்கட்சிகள் கண்டிப்பா ம்இரண்டு போயிருப்பாங்க. அதுக்கப்புறம், தன்னோட கட்சி அழுவழகத்துல எம். ஜி. ஆர், ஜெயலலிதா புகைப்படங்களோட இருக்க பேனர் விஜய் மற்றும் கட்சி விவரங்களோட வெச்சாரு செங்கோட்டையன். இதுவே பல பெற திரும்பி பார்க்க வெச்சி பேசு பொருளாவும் மாறுச்சி.. செங்கோட்டையனுக்கு கண்டிப்பா பெரிய பொறுப்பு கிடைக்கும்ன்னு கூறபட்டுச்சி.. அதேபோல, கட்சியின் உயர்மட்ட மாநில நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளராவும், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கு அமைப்புச் செயலாளராவும் நியமிக்கப்பட்டாரு..

அதன் பிறகு செங்கோட்டையன் தொடர்ந்து அவ்வபோது பிரஸ்மீட் குடுத்துட்டு இருக்காரு. கட்சியில இணைந்த அப்போ இளவல் விஜய்ன்னு சொன்ன செங்கோட்டையன் இப்போ தலைவர் விஜய், நாளைய முதல்வர், மக்கள் விரும்பும் தலைவர்ன்னு முழு தவெக நிர்வாகியாவே மாறிட்டாரு.. செங்கோட்டையன் தவெகல சேரந்தது அந்த கட்சிக்கு மிகப்பெரிய பிளஸ் பாயிண்ட்டா மாறி இருக்கு. இடையில, கார்த்திகை தீபம் வாழ்த்து தெரிவிக்கும் போஸ்டர்ல, எம்.ஜி. ஆர், ஜெயலலிதா, விஜய் புகைப்படங்களோட வெளியிட்டாரு செங்கோட்டையன்.. இதுவே பெரிய விவாதப்பொருளா மாறிச்சி.. என்ன நெனச்சாரோ தெரியல, திடிருன்னு அந்த போஸ்டர டிலிட் பன்னாரு.. இது பெரிய பூகம்பத்த கிளப்ப, மறுபடியும் அதே போஸ்டர செங்கோட்டையன் வெளியீட்டு செம்ம சம்பவம் பன்னாரு..

வாயா திறந்து விமர்சனம் பண்ண எல்லாரும் என்ன பேசுறதுன்னே தெரியாம வாயாடிச்சி போயிட்டாங்க.. இப்போ செங்கோட்டையன் விஜய் பிரச்சார பயண திட்டங்கள பிளான் பண்ணிட்டு இருக்காரு.. தொடர்ந்து செய்தியாளர் மத்தியில பேசும்போது பல சர்பிரைஸ் விழயங்களையும் சொல்லிட்டு இருக்காரு.. வர்ற 2026 சட்டமன்ற தேர்தல்தான் இப்போ தவெக மற்றும் செங்கோட்டையானோட ஒரே இலக்கா இருக்கு..



# ஸ்டாலின் அங்கிளுக்கு விஜய் சொன்ன சேதி.. காஞ்சிபுர சம்பவம்..

காஞ்சிபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் மக்கள் சந்திப்புக் கூட்டம் கடந்த நவ. 23 நடைபெற்றது. இதில் பேசிய விஜய், தனது தேர்தல் வாக்குறுதிகளை குறிப்பிட்டார். மேலும், தங்கள் ஆதரவாளர்கள் மீதான விமர்சனத்துக்கும் அவர் பதிலடி கொடுத்தார்.. கரூரில் கடந்த அக்டோபர் மாதம் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்துக்குப் பிறகு டிசம்பர் 4 அன்று சேலம் மாவட்டத்தில் விஜய்யின் பரப்புரைக் கூட்டத்திற்கு அனுமதி கோரப்பட்டது.. ஆனால், தவெக தரப்பில் அளிக்கப்பட்ட மனுவை கவனமாகப் பரிசீலித்ததாகக் கூறியுள்ள டவுன் சரக காவல் உதவி ஆணையாளர் சரவணன், சில காரணங்களால் அனுமதி மறுக்கப்படுவதாக கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.



இந்நிலையில், காஞ்சிபுரத்தில் உள்ள தனியார் கல்லூரியில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சுமார் 2,000 பேர் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சிக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சியில் மக்களை சந்தித்த விஜய், காஞ்சி மக்களின் பிரச்னைகளைப் பற்றிப் பேசி தன் உரையைத் தொடங்கினார். "வாலாஜாபத் அருகே உள்ள அவலூர் ஏரி பாலாறை விட உயரமாக இருப்பதால் ஆற்றுத் தண்ணீர் ஏரிக்குப் போக முடியவில்லை. தடுப்பணை கட்டுவதன் மூலம் விவசாயம் சிறப்பாக நடக்கும். இதற்காக எத்தனை ஆண்டு மக்கள் போராட வேண்டும்?" என்று விஜய் கேள்வியெழுப்பினார்.

மேலும், "பரந்தூர் விமான நிலையப் பிரச்னையில் நாங்கள் விவசாயிகளின் பக்கம் மட்டுமே நிற்போம்" என்று கூறிய அவர், புகழ்பெற்ற காஞ்சிப் பட்டு நெய்பவர்களின் நிலை மோசமாக இருப்பதாகவும் குறிப்பிட்டார். 60 ஆண்டுகளாக காஞ்சிபுரம் பேருந்து நிலையம் புதுப்பிக்கப்படாமல் இருப்பதையும் விமர்சித்த அவர், அரசால் அதற்கு ஒரு இடத்தை ஒதுக்க முடியாதா என்ற கேள்வியையும் எழுப்பினார்.

தொடர்ந்து பேசிய விஜய், தான் ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு தான் செய்ய நினைக்கும் நலத்திட்டங்கள் குறித்து பட்டியலிட்டார். "எல்லோருக்கும் நிரந்தரமான வீடு. எல்லா வீட்டுக்கும் ஒரு மோட்டார் சைக்கிள் வாகனம் உறுதியாக இருக்கும். கார் லட்சியம், அதற்கான வசதி வாய்ப்பை உண்டாக்கும் வகையில் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். வீட்டில் இருக்கும் ஒவ்வொருவரும்



குறைந்தது பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும். வீட்டில் குறைந்தது ஒருவருக்கு நிரந்தர வருமானம். அதற்கான வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும். அதற்கு வழிவகுக்கும் வகையில் கல்வியில் சீர்த்திருத்தம் செய்ய வேண்டும்" என பல்வேறு திட்டங்களை பட்டியலிட்டார். இந்தத் திட்டங்கள் எப்படி செயல்படுத்தப்படும் என்பது தவெகவின் தேர்தல் அறிக்கையில் தெளிவாக விளக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமூக ஊடங்களிலும் மாற்று அரசியல் காட்சிகள் மத்தியிலும் தவெக தொண்டர்கள் தற்கூறி என்றும் சினிமா நடிகரான விஜயை கூத்தாடி என்றும் கூறப்படுவதை சுட்டிக்காட்டிய விஜய், "எம்ஜிஆர் கட்சியை ஆரம்பத்தில் இருந்தே கூத்தாடியின் கட்சி என்றுதான் சொல்கிறார்கள். ஆனால், அப்படிச் சொன்னவர்கள் அனைவரும், மக்கள் போல் எம்ஜிஆர் அவர்களோடுதானே போய்ச் சேர்ந்தார்கள். இது வரலாறு. இது நம்மைவிட அவர்களுக்கு நன்றாகவே தெரியும்".. "தற்குறி தற்குறி என்கிறீர்களே, இவர்களெல்லாம் ஒன்றாக சேர்ந்துதான் உங்கள் அரசியலை கேள்விக்குறியாக்கப் போகிறார்கள். இவர்களெல்லாம் தமிழ்நாட்டு அரசியலின் ஆச்சர்யக்குறி. தமிழ்நாட்டு அரசியல் மாற்றத்திற்கான அறிகுறி" என்றும் அவர் கூறினார்.

கரூர் சம்பவத்திற்கு பிறகு விஜயும் அவரது கட்சியுமான தவெக முடங்கிவிடும் என தவறான கணக்கு போட்டவர்கள் இந்த காஞ்சிபுரம் சம்பவத்தால் தவிடுபொடியாகியுள்ளனர்.. இப்போது விஜய் மற்றும் தவெக மிகவும் வேகமாக தேர்தலுக்கான முன்னேற்பாடு பணிகள், குறிப்பாக, மக்கள் சந்திப்புகள், பொது சின்னம் கோருதல், வேட்பாளர்கள் தேர்வு என பல வேலைகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர், கரூர் சம்பவத்தை தொடர்ந்து தவெகவின் தற்போதய எழுச்சி, நான் வீழ்வேனென்று நினைத்தாயோ என தமிழக அரசியல் களத்தையே அதிறவைத்துள்ளது..


# தொடர்ந்து மறுக்கப்படும் இந்துக்களின் உரிமை..

# இதுதான் திராவிட மாடலா?

முருகனின் அறுபடை வீடுகளில் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் மலையில் உள்ள நீர் சுனையை இந்து மக்கள் தீர்த்தமாக கருதுகின்றனர். சிக்கந்தர் தர்கா இருப்பதாக கூறப்படும் இந்த மலைப்பகுதியில் இஸ்லாமியர்கள் கோழி ஆடுகளை பலியிட துவங்கிய முதல் இந்த பிரச்சனை துவங்கியது. முருகன் கோவிலும் பக்தர்களின் பெரிய நம்பிக்கையான சுனையும் உள்ளது.. அதனால் மலை மீது அசைவ உணவுகளை சாப்பிடுவதோ உயிர்களை பலியிடுவதோ கூடவே கூடாது, அசைவம் முருகனுக்கு ஆகவே ஆகாது.

விதண்டாவாதமாக சில தீய சக்தியின் தூண்டுதலால் எம்.பி நவாஸ் கனி தனது ஆதரவாளர்களுடன் அசைவ உணவை திருப்பரங்குன்றம் மலையில் சாப்பிட்டு இந்துமத மக்களின் உணர்வை காயப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து திருப்பரங்குன்ற மலையில் அசைவ உணவு கூடாது என்னும் சர்ச்சை வெடித்தது. இத்தனை கலவரம் வெடிக்க வாயை பொத்தி வேடிக்கை பார்த்தது இந்த திமுக அரசு.. அணைவருக்குமான அரசு, வேற்றுமையோ பிரிவினையோ பார்க்காத அரசு என்றால் எம். பி. நவாஸ் கனியின் செயலை கண்டித்து இருக்க வேண்டும். ஆனால், இங்கு நடந்ததோ வேறு..

இது ஒரு புறம் இருக்க ஆண்டுதோறும் கார்த்திகை



தீபத்தன்று திருப்பரங்குன்ற மலையில் உள்ள பிள்ளையார் கோவில் அருகே கார்த்திகை தீபம் ஏற்றப்படும். இம்முறை, இந்த கார்த்திகை தீபத்தை பண்டைய காலத்தில் செய்தது போலவே, மலையின் ஒரு குன்றில் இருக்கும் தீபத்தூணில் ஏற்ற ராம ரவிக்குமார் என்பவர் மனு அளித்தார். இது ஆகம விதிப்படி நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த தீபத்தூணில்தான் தீபம் ஏற்றப்பட்டது. இதனை மீண்டும் கொண்டு வந்து இந்து மக்களின் நம்பிக்கையை உயிர்படையச் செய்ய வேண்டும் என கோரிக்கை வலுத்தது.

இவை அனைத்தையும் வைத்து ஒரு சித்து விளையாட்டு விளையாட வேண்டும் என நினைத்த திமுக ஹிந்து - இஸ்லாமிய மக்களிடையே மோதலை ஏற்படுத்தும் சூழ்ச்சியை நடத்தியது. திருப்பரங்குன்றம் மலையின் மேலடிவாரத்தில் இருக்கிறது இந்த தீபத் தூண். ஆனால் திமுகவினர் சிக்கந்தர் தர்காவிற்கு அருகே உள்ள தூணையே ஹிந்துக்கள் தீபம் ஏற்ற கேட்பதாக ஒரு போலியான கட்டமைப்பை உருவாக்க தொடங்கினர். மேலும், ஹிந்து மக்களின் நம்பிக்கையை புண்படுத்துமவிதமாக, அந்த தீபத்

தூணை எல்லைக்கல் எனவும் சொல்ல ஆரம்பித்தனர்.

இதன் அடிப்படையில் இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி. ஆர். சுவாமிநாதன் கார்த்திகை தீபத்தன்று தீபத்தூணில் 6 மணிக்கு கார்த்திகை தீபத்தை ஏற்ற வேண்டும் என உத்தரவிட்டார். உத்தரவை மீறினால் 6:05 மணிக்கு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் எனவும் எச்சரித்து இருந்தார். இந்து மத எதிர்ப்பு அரசியலை கையிலெடுத்த திமுகவோ நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதித்து தீபத்தூணில் கார்த்திகை தீபத்தை ஏற்றவிடாமல் தடுத்தனர். மேலும் மாவட்டத்தில் 144 தடை அமலில் இருப்பதாக பொய் கூறி பாதுகாப்பு பணிக்காக வந்திருந்த சிஐஎஸ்எப் அதிகாரிகளையும் ஏமாற்றி பணியில் ஈடுபடாமல் செய்தனர்.

மக்கள் தங்களின் நல்வாழ்விற்காக கோவிலுக்கு செல்கிறார்கள்.. அந்த கோவிலை பாதுகாத்து மக்களின் மத நம்பிக்கையை பாதுகாக்கவே அறநிலையத்துறை உள்ளது. ஆனால் இந்த விவகாரத்தில் அறநிலையத்துறையே இந்து மக்களுக்கு எதிரான ஒரு செயலை செய்தது. சிக்கந்தர் தர்கா இருப்பதால் அங்கு தீபத்தூணல் கார்த்திகை தீபம் ஏற்றக்கூடாது என்னும் பிம்பத்தை ஏற்படுத்தியது திமுக. ஆனால் மதுரையை சேர்ந்த எந்த இஸ்லாமிய அமைப்புகளும் இந்த விவகாரம் தொடர்பாக தங்களது எதிர்ப்புகளை தெரிவிக்கவில்லை. மாற்றாக இந்து மக்களையும் இந்து மக்களின் நம்பிக்கையையும் இந்து மக்களின் வழிபாட்டு தலங்களையும் பாதுகாக்க வேண்டிய அறநிலையத்துறை இந்து மக்களுக்கு எதிராக இந்த கார்த்திகை தீப விவகாரம் தொடர்பாக மேல்முறையீட்டு செய்திருப்பது திமுக ஆட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையை சீர்குலத்துள்ளது.

இது தொடர்பாக நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறிய தமிழக அரசு ஏதோ ஒரு உள்நோக்கத்தோடு செயல்படுவதாக நீதிபதியே கண்டனம் தெரிவித்தார். மேலும் ஆண்டில் ஒரே ஒரு நாள் தீபம் ஏற்றுவதால் மத நல்லிணக்கம் கெட்டுவிடுமா எனவும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இவை எதற்குமே பதில் இல்லாத திமுகவும் அதன் கூட்டணி கட்சிகளும் கண்ணை மூடிக்கொண்டு தீபத்தூணில் கார்த்திகை தீபத்தை ஏற்றக்கூடாது என ஹிந்து மதத்திற்கு எதிரான அரசியலை நடத்தி வருகின்றனர். மேலும், இந்த விவகாரத்தை ஆராய்ந்து மலையை பார்வையிட்டு தீர்ப்பை கொடுத்த நீதிபதியின் பணியை பறிக்கும் வேலையிலும் இந்த திமுக மற்றும் அதன் கூட்டணிகள் முயன்று வருகிறது..



சிறுபான்மையினரின் வாக்குகளை பெறவே திமுக இப்படி சூழ்ச்சி செய்கிறது. ஆனால், மாநிலத்தில் உள்ள சிறுபான்மையினர் குறிப்பாக இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களே திமுகவின் இந்த செயல்பாட்டை ஆதரிக்கவில்லை. நீதிமன்றத்தை அவமதித்துவிட்டு பாராளுமன்றத்தில் திமுக எம்பிக்கள் கோஷங்களை எழுப்புவது தேசிய அளவில் தமிழ்நாட்டிற்கு தலைகுணிவை ஏற்படுத்தியுள்ளது . முன்னதாக, மதுரை எம். பி. சு. வெங்கடேசன், திருப்பரங்குன்றத்தில் தீபத்தூணில் தீபம் ஏற்றினால் கலவரம் வெடிக்கும் என்றார். அதே போல கலவரம் வெடித்தது.. அப்போது இது திட்டமிடபட்ட செயலா என்னும் கேள்வியும் சந்தேகமும் எழுகிறது..

# மூழ்கும் சென்னை...

# எதிர்வினையாற்றும் மக்கள்

வங்கக் கடலில் உருவாகிய டிட்வா புயலால், சென்னையை ஒட்டிய கடலோரப் பகுதிகளில் கனமழை பொழிந்தது. இது சென்னை, திருவள்ளூர், காஞ் சிபுரம், செங்கல்பட்டு போன்ற மாவட்டங்களில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி, பலத்த மழையைத் தந்தது.

ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் முதல் மழைப்பொழிவு என்பது சகஜமான ஒன்று. அந்த வகையில் தலைநகர் சென்னையை எடுத்துக் கொண்டால் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் வந்தால் அது அலர்டாக வேண்டிய மாதமாக மாறி உள்ளது. சென்னையை பொருத்தவரையில் மெரினா கடற்கரை இருக்கும் காரணத்தினாலும் கடலோர மாவட்டமாக இருக்கும் காரணத்தினாலும் சிறிய மழை என்றாலே சென்னையில் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது.

தாழ்வான பகுதிகள், கடலோரப் பகுதிகள் மற்றும் அடர்த்தியான பகுதிகளில் மழை நீரின் தேக்கம் அதிகமாகவே இருக்கிறது. இரண்டு மணி நேரம் தொடர்ந்து மழை பெய்தாலே சாலையில் மழைநீர் தேங்கக்கூடிய சூழல்தான் சென்னையில் நிலவி வருகிறது.

இதற்கு ஒரு தீர்வு இல்லையா ?? என சென்னை மக்கள் ஏங்கி தவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆண்டுதோறும் புயலை சந்தித்து வரும் சென்னைவாசிகளோ, மழையிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்வதற்காக படகுகளை வாங்கி வைப்பது என தயாராக இருக்கிறார்கள். அதேபோல செய்திகளில் வானிலை நிலவரங்களை கண்டறிந்து மழை வரும் என்றால் அதற்கான மளிகை சாமான்களையும் உணவு பொருட்களையும் வாங்கி வீட்டில் தேக்கி வைத்துக் கொள்கிறார்கள்.

இப்படி பொதுமக்களே மழை காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து தங்களை பாதுகாத்து மழையின் பாதிப்பை தங்களிடம் அண்டவிடாமல் இருக்கும்போது, மாநகராட்சியும் அரசாங்கமும் முன்னேற்பாடுகளுடன் இருக்க வேண்டியது மிக மிக அத்தியாவசியமான அவசியமான ஒன்றாக உள்ளது .



ஆனால் சொன்னபடி அத்தியாவசியமாகவும் அவசியமாகவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை சென்னை மாநகராட்சியும் தமிழ்நாடு அரசும் எடுக்கிறதா என்றால் அது மிகப் பெரிய கேள்வி குறிதான். திமுகவின் இந்த 4.5 ஆண்டு கால ஆட்சியில் சுமார் ரூ.4000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு மழைநீர் வடிகால் பணிகள் சென்னையை சுற்றியுள்ள பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டது.

ரூ.4000 கோடி ஒதுக்கினீர்களே இந்த மழைநீர் வடிகால்கள் மழை நீரை அப்புறப்படுத்தியதா ? என்றால் மழைநீர் வடிக்கால் பணிகள் நடந்துவிட்டது.. ஆனால் மழை நீர் தான் நடக்காமல் அதே இடத்தில் இருக்கிறது என்னும் சூழலே சென்னையில் நிலவுகிறது.

தி.நகர், நுங்கம்பாக்கம், வடபழனி, அரும்பாக்கம் , ராயப்பேட்டை, ராயபுரம் வடசென்னை பகுதிகள் என பல பகுதிகள் இந்த தித்வா புயலால் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டது. மேற்கூறிய பகுதிகளில் பொதுமக்களின் தொகை அதிகமாக இருக்கிறது.. அதேபோல அந்த பகுதிகளும் மிகவும் அடர்த்தியான பகுதியாக இருக்கிறது.. அதனால் மழைநீர் அதிகமாக தேங்குகிறது போன்ற சப்பைகட்டுகளை மாநகராட்சி அதிகாரிகளும் திமுகவினரும் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள்.

4000 கோடி ரூபாய்க்கு போட்ட இந்த மழைநீர் வடிகால்கள் எப்படி இருக்கிறது என பார்க்கும்போது மழை நீரே உள்ளே செல்லாத வகையில் மிகவும் தரமற்ற நிலையிலும் மோசமான வகையிலும் இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த கனமழையால் சென்னை முழுவதுமே பாதிக்கப்படுகிறது. இதற்கு உங்களுடைய பதில் என்ன என மாநகராட்சி மேயரைக் கேட்டால், அவர் ஒரே பதிலை தான் கடந்த 4.5 ஆண்டுகளாக சொல்லி வருகிறார்.


fast track
Taxi App
Chennai is Calling
Pick up & Explore
ANYWHERE WITHIN A CITY
LOCAL TRIP !
Local
Package
Select Package
Plan your
fast track
044 2888 9999 | 6000 6000
DOWNLOAD THE FASTTRACK TAXI APP
SCAN TO DOWNLOAD APP

PeeYesYem HYUNDAI
DRIVE TO SUCCESS

HYUNDAI

# Bring Home a PeeYesYem Hyundai CRETA Electric today!




## Undisputed. Ultimate. Now electric.

Contact Now
9600114000

**PEEYESYEM HYUNDAI**
Chennai | Madurai | Tuticorin | Ramnad | Karaikudi | Sivagangai | Kovilpatti | Tiruchendur




TIMES OF REPUBLIC TAMIL MONTHLY RNI. NO: TNTAM/2022/82294
Owned Published and printed by C.NAVIN PRAKASH, Published from NO,33 PRINCE VILLAGE APTMS, PHASE 2 BLOCK NO C15, DOOR NO.303 ILAIYA MUDALI STREET TONDIARPET, CHENNAI-.600081. & printed at SEKAR OFFSET PRINTERS, No.168/50, BIG STREET, CHEPAUK, Chennai - 600 005. Editor C.NAVIN PRAKASH